
0836

# சாயி பாபா ! சாயி நாதா !






சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி பாபா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/2001/0836

# சாயிபாபா!
# சாயிநாதா!

ஆசிரியர்
**செ. நடேசபிள்ளை**



சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சாயிபாபா! சாயிநாதா! |
| ஆசிரியர் | : | செ.நடேசபிள்ளை |
| முதற்பதிப்பு | : | பகவான் சாயிபாபாவின்<br>ஜயந்தி தினம்<br>(23.11.2000) |
| கணனி வடிவமைப்பு | : | திருமதி வத்சலா அசுவத்தாமன்<br>திருமதி அபிராமி பாலகணேஷ் |
| நெறியாள்கை | : | சிவநெறிச் செம்மல்<br>வை.அநவரதவிநாயகமூர்த்தி |
| வெளியீடு | : | சிவகாமி அம்மாள்<br>பப்ளிகேஷன்ஸ்<br>39, 36வது ஒழுங்கை<br>கொழும்பு-06<br>தொலைபேசி : 596253 |
| அச்சகம் | : | யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்<br>48B, புளுமெண்டால் வீதி,<br>கொழும்பு - 13.<br>தொலைபேசி : 330195. |
| [illegible] | : | [illegible] |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எனது கணவர் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் இளைய சகோதரர், எமது குடும்பத்தினரின் பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் பாத்திரரான, அண்மையில் அமரத்துவம் அடைந்த, திரு.செ.நடேசபிள்ளை அவர்கள் பகவான் சாயி பாபா பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். பாபாவின் பிறந்த நன்னாளாம் இன்று (23.11.2000) இந்நூலை வெளியிட எமது பதிப்பகத்துக்குத் திருவருள் கைகூடி உள்ளது.

அன்னாரின் அன்புச் சகோதரி, பத்திரகாளி அம்பாளின் பக்தை சிவகாமி அம்மாளின் நினைவில் உருவான பதிப்பகத்தினால் அவரது நூல் வெளியிடப்படுவது தெய்வ சங்கற்பம். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் சஞ்சீவி பத்திரிகைகளிலும் எமது சஞ்சிகையான சந்நிதியிலும் வெளிவந்த அன்னாரின் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

இலகு தமிழில் இனிய நடையில் பாபாவின் சீரிய கருத்துக்களை அழகுற எடுத்துக் கூறுகிறார் நூலாசிரியர். அவர் பாபாவின் உண்மையான பக்தர். பாபாவின் அருளினை நிறையவே அனுபவித்தவர், மனித நேயம் மிக்கவர்.

'இமயம் என வாழ்ந்த மகன்' என்று அகில இலங்கைக் கம்பன் கழகம் அவரைப் பாடிய ஏற்புடைச் சிறப்பினை பொருத்தத்தினை எண்ணி எண்ணி மகிழ்கிறோம். கண்கள் குளமாகின்றன. அன்னாரின் நூலினை பகவான் சாயிபாபாவின் திருவடிகளில் சாத்தி, ஏத்தித் தொழுது நிற்கிறோம்.

**பாலாம்பிகை சிவசுப்பிரமணியம்**
(இலண்டன்)
புரவலர்
சிவகாமி அம்மாள் பப்ளிகேன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகப்பேறு அருளிய மகான்

23ம் நாள் நவம்பர் மாதம் ஓர் புனித நாள். அன்று தான் நம் பகவான் சத்திய சாயி பாபா அவதரித்த நாள் 23.11.1926. இந்த நன்னாளில் (பிறிதொரு வருடத்தில்) பங்களூருக்கு அருகிலுள்ள ஜல காலி என்னும் இடத்தில் ஒரு பாலன் பிறந்தான். அவனின் பிறப்பை பற்றியது தான் இந்தச் சிறுகதை அவன் நாமம் கிருஷ்ண கிசோர். குட்டிக் கிருஷ்ணன்.

சக்கரவர்த்தி அவர்கள் வங்காள தேசத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது குடும்பத்தினரும், அவர்களின் மூதாதையினரும் பழமை வாய்ந்த ஓர் ஆத்மீக இயக்கத்தின் கொள்கைகளைப் பழுதறக் கடைப்பிடித்து, அதன்படி ஒழுகினர். காலம் காலமாக இந்த இயக்கத்தின் தலைமைப் பதவியை சக்கரவர்த்தி குடும்பத்தினரே வகித்து வந்தனர்.

சக்கரவர்த்திக்கு 17 வயது நடக்கும் பொழுது தந்தையைப் பறி கொடுத்தார். அவர் இறக்கும் பொழுது தந்தையே ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார். தந்தை வகித்த பதவியை தனயனை ஏற்கும்படி வேண்டப்பட்டது. வயது, கல்வி தகுதி, மதிப்பு, மற்றும் போதிய அனுபவமின்மையால் பொறுப்பு மிகுந்த பாரிய பதவியைச் சக்கரவர்த்தி ஏற்க மறுத்து விட்டார்.

சக்கரவர்த்தி கல்கத்தா சென்று அங்கு புகழ் பெற்ற ஒரு பத்திரிகையின் காரியாலயத்தில் வேலைக்கு அமர்ந்தார். ஓய்வு நேரத்தில் படித்து முதுகலைமானிப் பரீட்சைக்கு தேர்வு எழுதினார். பட்டமும் பெற்றார். அப்பொழுது இரண்டாம் மகாயுத்தம் மூண்டது. இவருக்கு இந்தியா விமானப்படையில் சேரும் வாய்ப்பு கிட்டிற்று. சேர்ந்து ஒரு சில மாதங்களில் விமானப்படையினர் நடத்திய விசேஷத் தேர்வில் திறம்பட எழுதி விமான ஓட்டியாக தெரிவு செய்யப்பட்டார். இவரின் ஆற்றலின் திறமையாலும், அந்தஸ்திலுள்ள உயர்ந்த அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெற்றதாலும் வெகு விரைவில் ஒரு ஆகாயப்படை அணிக்குத் தலைவராக (squadron leader) உயர்வு பெற்றார். இயற்கையாகவே எதற்கும் பயப்படாத உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த சக்கரவர்த்தி எந்தக் கடினமான அபாயகரமான வேலைகளிலும் பங்கு கொள்ளப் பின்நிற்க மாட்டர். விமானம் பறக்கும் பொழுது அநேக ஆயிரமடி உயரத்திலிருந்து “பரசூட்” (Parachute) மூலம் கீழே பாய்வதிலும் திறமை பெற்று முதல்வராக தேர்ந்து எடுக்கப்பட்டார். பயிற்சியை முன்னிட்டு பல முறை இங்கிலாந்து சென்று வந்தார். திறமை அடிப்படையில் இந்திய விமானப்படைப் பயிற்சி ஸ்தாபனத்திற்குத் தலைவராக உயர்த்தப்பட்டார். சுருங்கச் சொல்லின் இந்திய விமானப்படை வட்டாரத்தில் இவர் பெரும் கீர்த்தி வாய்ந்த அதிகாாரியாக கணிக்கப்பட்டார்.

அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் எங்கள் உடன் பிறப்புக்கள் அல்லவா? சக்கரவர்த்தியின் குடும்பத்தினரையும் துரதிர்ஷ்டம் தீண்டத் தவறவில்லை.

இவரின் வேகமான முன்னேற்றத்தால் சக ஊழியர்களின் பொறாமையைச் சம்பாதித்தார். போதாத காலம், அதிகாரப் பெருமையினால் சற்று தலைக்கனமும் இவருக்கு ஏற்பட்டது. முடிவு இவர் யம்மு காஷ்மீரிலுள்ள ஒரு சிறிய தளத்திற்குத் தலைவராக மாற்றப்பட்டார். இந்த மாறுதல் இவரின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்திற்று.

யம்மு காஷ்மீரில் இவருக்கு ஒதுக்கப்பட்ட வாசஸ்தலம் இவரின் உயர்ந்த அந்தஸ்திற்கு உகந்ததாக அமையவில்லை. மிகவும் குளிர்ந்த தேசம். மழையும் புயலும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். வீட்டின் கூரை பழுதடைந்திருந்ததால் அறைகள் சதா ஒழுகிக் கொண்டே இருந்தன. அறைகளை சூடேற்றும் சாதனங்களும் சீராக இயங்கவில்லை. இவற்றுடன் மனைவியும் கர்ப்பம் தரித்தாள். தலைப்பிரசவம். மனைவி கவலையற்றிருக்க வேண்டிய நேரம். அன்றாடம் வீட்டில் அனுபவிக்கும் பல வசதீயீனங்களினால் பாதிக்கப்பட்டு மனைவி மனோ தைரியத்தையும் இழந்தாள். அவளின் உடல் நலம் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு குழந்தையும் இறந்து பிறந்தது. அத்துடன் மனைவியின் கர்ப்பையும் பாதிப்படைந்தது. சொற்ப காலத்தில் அது ஒரு தொற்று நோயாக வெளிப்பட்டது. கணவனையும் இந்த நோய் விட்டு வைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயைத் தீர்க்க பிரசித்தி பெற்ற பல வைத்திய கலாநிதிகளின் ஆலோசனைகளை நாடினர். அவர்கள் அனைவரும் இந்த வியாதி மாற்ற முடியாதது அத்துடன் இருவரும் குழந்தை பெறும் பாக்கியத்தையும் முற்றாக இழந்து விட்டீர்கள் என்று ஏகமனதாக தீர்ப்பு வழங்கினர்.

பிள்ளைப் பாக்கியமற்று, ஆரோக்கியம் சிதைபட்டு, தொழிலில் முன்னேற்றம் தடைப்பட்டு வசிக்கும் இல்லத்திலும் வாழ முடியாத பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். வேறு ஒருவராயின் இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுபட தவறான வழிகளை பின் பற்றி தங்கள் வாழ்க்கையை நரகமாக்கியிருப்பர். ஆனால் இவர்களோ இவர்கள் பெற்றோர் செய்த புண்ணிய பலன்களினாலோ என்னவோ இந்தக் கவலைகளிலிருந்து விடுபட ஆத்மீகப் பாதையைப் பின்பற்றினர்.

ஸ்ரீ சீரடிபாபாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்கள் இவர்கள் கைக்கு கிடைத்தன அந்த நூல்களைத் திரும்பத் திரும்ப படித்தனர்.

அவர்கள் மனமும் சற்று அமைதியடைந்தது. இவர்களின் தூய அன்பினால் கவரப்பட்ட சாயி நாதர். இவர்களுக்கு அருள் பாலிக்கத் தொடங்கினார்.

எதிர்பாராத விதத்தில் சக்கரவர்த்தி பங்களூருக்கு அருகாமையிலுள்ள ஸலகா என்ற தளத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு வசித்த சக வங்காளிகளின் சிநேகிதம் இவருக்கு கிட்டிற்று அவர்களுள் பேராசிரியர் பனார்ஜியும் ஒருவர்.

இவர்கள் பங்களூருக்கு அருகாமையில் வசித்ததினால் பகவான் சத்திய சாயி பாபாவைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டார்கள். பகவான் சத்தியசாயி பாபா சீரடியின் மறு அவதாரமென்றும் கேள்விப்பட்டார்கள். பகவானைப் போய் நேராக சந்திப்பதற்கு மிகவும் ஆர்வம் அடைந்தனர். தங்கள் நண்பன் பேராசிரியரையும் தங்களுடன் வரும்படி அழைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் 'நான் பாபாவைப் பற்றி பல விதமாகக் கேள்விப்பட்டுள்ளேன். ஆகையால் நான் அவரைச் சந்திக்க விரும்பவில்லை' என்று பகர்ந்தார். சக்கரவர்த்தியோ அவரை விடுவதாகவில்லை. விடாப்பிடியாக நின்று ஓய்வு நாளில் சக்கரவர்த்தியும் பேராசிரியர் பனார்ஜியும் இன்னும் ஒரு விஞ்ஞான பட்டதாரியும் வைட்பீல்ட் சென்றனர்.

ஆச்சிரம வாசலையடைந்ததும் ஒரு பையன் 'டாக்டர் பனார்ஜி உங்கள் கூட்டத்தினருக்கு 9ம் நம்பர் அறையை பாபா ஒதுக்கி வைத்துள்ளார் திறப்பு இதோ உள்ளது பெற்றுக் கொள்ளவும்' என்றான்.

சக்கரவர்த்திக்கு இது ஒரு பெரும் வியப்பாக இருந்தது. தாங்கள் அன்று வைட்பீல்ட் போவதை பற்றி அவர்கள் எவருக்கும் அறிவிக்கவில்லை. டாக்டர் பனார்ஜியோ ஒன்றும் நடவாதது போல் அமைதியாக இருந்தர்.

தங்கள் பொருட்களை எல்லாம் அவர்களின் அறையில் வைத்து விட்டு பாபாவைச் சந்திக்கச் சென்றார்கள். பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாபாவின் தாிசனத்திற்கு காத்திருந்தனர்.

பாபா மேல் மாடியில் வந்து நின்றார். சக்கரவர்த்தி பாபாவைப் பார்த்ததும் தான் ஒரு காலத்தில் இவருடன் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகினவராகவும், பிறகு அவரின் தொடர்பு அற்று அவரை இன்று தான் சந்திப்பதாக தோன்றிற்று. ஏதோ தான் தொலைத்த விலை மதிப்புள்ள பொருளைத் திரும்பவும் பெற்றவரடையும் குதுாகலத்தை அடைந்தார். கண்ணில் நீர் சுரந்தது.

அவர்கள் சென்ற அன்றே அவர்கள் மூவருக்கும் பாபா பேட்டி அளித்தார் டாக்டர் பனார்ஜியைக் கட்டி அணைத்து 'கடைசியாக என்னிடம் வந்து விட்டாய்' என்று கூறி அவருக்கு ஒரு அழகிய பதக்கத்தை கையை அசைத்து காற்றிலிருந்து உண்டாக்கிக் கொடுத்தார். மூன்று பேருடனும் ஆத்மீகத்தைப் பற்றி 45 நிமிடங்கள் கதைத்தார். அதன் பின் சக்கரவர்த்தியின் கைகளைக் கோர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிண்ணம் போல வடிவம் அமைத்தார். பின் தன் கையை மேலே உயர்த்த அசைத்ததும் பாபாவின் விரல்கள் ஊடாக விபூதி சக்கரவர்த்தியின் உள்ளங் கையில் நிறைய சொரிந்தது.

அவ்வளவு விபூதியையும் கீழே சிதற விடாமல் விழுங்கும்படி கட்டளை இட்டார். சக்கரவர்த்தியும் பாபாவின் கட்டளைக்குப் பணிந்தார். தான் அனுபவிக்கும் இன்னல்களை எல்லாம் பாபாவிற்குச் சொல்ல வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை.

அடுத்த நாள் காலை மூவரையும் இன்னும் ஒரு சந்திப்பிற்கு அழைத்தார் இரண்டாம் முறையும் விபூதி வரவழைத்து சக்கரவர்த்தியை உண்ணும்படி பணித்தார். சக்கரவர்த்தியும் பாபா பணித்தபடி மிகவும் விருப்பமுடன் உண்டார். 'இவை சுவையும் மணமும் நிறைந்ததாக இருக்கிறது' என்று மிகவும் பக்தியுடன் பாபாவிடம் தெரிவித்து மூவரும் பாபாவிடம் விடைபெற்று வெகு உற்சாகத்துடனக் பங்களூர் நோக்கிப் புறப்பட்டனர்.

அடுத்தநாள் விடிய சக்கரவர்த்தி விழித்தெழுந்தார். எழுந்ததும் அவரை பீடித்திருந்த தொற்று நோய் அவரை விட்டு அகன்றதை உணர்ந்தார். மனைவியிடம் சொல்வதற்கு வாயெடுத்ததும், அவளும் தான் தொற்று நோயிலிருந்து பூரணமாக விடுபட்ட சந்தோஷமான செய்தியை வெகு ஆனந்தத்துடன் கணவனிடம் கூறினாள். இருவரும் பரவச நிலை எய்தினார். அவர்கள் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி போலப் பாயத் தொடங்கிற்று. இருவரும் பூரணமாக பாபாவிடம் சரணடைந்து அவரின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தனர்.

அடுத்த மாதம் சக்கரவர்த்தியும் டாக்டர் பனார்ஜியும் தங்கள் குடும்பத்துடன் பாபாவைத் தரிசிக்க புட்டபர்த்திக்குச் சென்றனர். இவர்களுக்கு பேட்டி அளிக்கும் போது பாபா சக்கரவர்த்தியின் மனைவியை நோக்கி 'இந்த வருடம் உனக்கு ஒரு ஆண் மகன் பிறக்கும் என்றார் இதை பாபா சொன்னதும் சக்கரவர்த்தி சிரித்தார். சிரிப்பதற்கு காரணத்தைக் கேட்டார் பகவான் பாபா. சக்கரவர்த்தி பாபாவை பக்தியுடன் வணங்கி பாபா 4 பிரசித்தி பெற்ற வைத்திய கலாநிதிகள் என்னையும் என் மனைவியையும் வெகு நுணுக்கமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட சோதனைக்கு உட்படுத்தி எங்களுக்கு இனிமேல் பிள்ளைப் பாக்கியம் உண்டாவதற்கான தகுதியை இருவரும் பூரணமாக இழந்து விட்டதாக அறிவித்தார்கள். ஆனால் பாபாவோ எங்களுக்கு குழந்தை கிடைக்குமென்று சொல்கிறீர்கள் என்றார்.

பகவான் சக்கரவர்த்தியின் கண்களை உற்று நோக்கி அவரின் கைகளினுள் குறிகாட்டும் இரு விரல்களையும் ஒன்றோடொன்று குறுக்காக வெட்டும் பாவனையில் வைத்து 'சாமி சங்கற்பம் செய்தால் அது தவறாது நடந்தே தீரும். இந்த வருடம் நவம்பர் மாதம் ஓர் உன்னத ஆத்மா உங்களிடம் வருகிறது நானே நேரே வந்து குழந்தைக்கு நாமகரணம் செய்து வைப்பேன்' என்று பகர்ந்தார். ஆத்மீகக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சக்கரவர்த்தி தான் ஒரு தெய்வீக புருஷர் முன் நிற்பதாக உணர்ந்தார். சக்கரவர்த்தியின் மனைவிக்கு இராமரின் உருவம் பொருந்திய ஒரு பதக்கத்தையும் கையை அசைத்து எடுத்துக் கொடுத்தார். சக்கரவர்த்தியின் மனைவி கிருஷ்ண பக்தை. குட்டிக் கிருஷ்ணனில் கொள்ளை ஆசை. தன் கணவனிடம் இந்தக் குறையை அடிக்கடி எடுத்துச் சொல்வாள். சக்கரவர்த்தியோ தனக்கு ஒரு நற்பண்பு நிறைந்த மகன்- பாபாவின் சொற்களால் 'ஒரு உன்னத சீவன்' வருவதை நினைத்து, நினைத்து புளகாங்கிதம் அடைவார்.

இந்த சந்தோஷகரமான செய்தியை வைத்திய கலாநிதிகளுக்கும் தெரிவித்தார். அவர்களோ இதைக் கேட்டு எள்ளி நகையாடினர். 'சாதுக்கள், சுவாமிகளும் மலடிகளைப் பிள்ளை பிறக்க வைப்பாராகில் விஞ்ஞான ரீதியில் வைத்தியம் தேவைப்படாது' என்றார்கள்.

ஒரு யூன் மாதம் ஒரு நாள் சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு டாக்டர் பிரதம தாதியுடன் சக்கரவர்த்தி இல்லம் வந்து அவரின் மனைவியை மிகவும் நுணுக்கமாகச் சோதனை இட்டார். டாக்டர் கூறியதாவது 'மன்னிக்கவும் உங்கள் மனைவி கருவடையவில்லை. எல்லாம் வாய்வின் கோளாறு'. பிரதம தாதியும் டாக்டரின் தீர்ப்பை ஆமோதித்தார்.

சக்கரவர்த்தி தம்பதிகள் இந்தச் செய்திகளினால் கலவரமடைந்தார்கள். பாபா சொற்படி 'இன்னும் ஐந்தே மாதங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பிறக்க வேண்டும். இப்போ கருவுண்டாகாமல் இருந்தால் குழந்தை எவ்வாறு நவம்பர் மாதம் பிறக்கும்? பாபாவின் மேல் அவர்களுக்கு ஐயம் உண்டாயிற்று.

இது நடந்து ஒரு சில நாட்களில் பாபா டாக்டர் பனார்ஜின்' வீட்டிற்கு விஜயம் செய்தார். சக்கரவர்த்தி குடும்பத்தினர் பாபாவின் தரிசனத்திற்கு அங்கு வந்து காத்திருந்தார்கள் என்று சொல்லத் தேவையில்லை. பாபா வந்ததும் அவரின் காலடியில் போய் அமர்ந்தார்கள். அவர்கள் வாய் திறக்குமுன் பாபா 'டாக்டர்கள் கூறியவைகளை அப்படியே கூறி 'நீங்கள் கிலேசமடைய வேண்டாம். உங்கள் மகன் 23ம் திகதி நவம்பர் மாதம் உதிப்பான்' என்றார். சக்கரவர்த்தி குடும்பத்தினர் இதைக் கேட்டதும் தாங்க முடியாத பேரானந்த நிலையில் மிதந்தனர். பாபாவின் பிறந்த புனித நாளில் அல்லவா தங்கள் குமாரன் உதிக்கப் போகிறான்.

பாபா சக்கரவர்த்தியின் மனைவியை நோக்கி 'நான் சிருஷ்டித்துக் கொடுத்த பதக்கத்தைப் பற்றி சதா குறை கூறிக் கொண்டே இருக்கிறாய். இதோ உன்னுடைய கிருஷ்ண பரமாத்மா. இதை ஏற்றுக் கொள்' என்று சொல்லி ஒரு பதக்கத்தை அவளுக்கு அளித்தார். பாபா கொடுத்த பதக்கத்தில் ஒரு பக்கம் கிருஷ்ணரும் மறு பக்கத்தில் சீரடி பாபாவின் உருவமும் அமைந்து இருந்தன.

அன்றிரவே சக்கரவர்த்தியின் மனைவி தன் வயிற்றில் குழந்தை அசையும் உணர்ச்சியைப் பெற்றார். இதனால் அவர்களுக்கு குழந்தை உண்டாகியிருப்பது உறுதியாயிற்று.

சந்தேகப் பிராணிகளாகிய டாக்டர்கள் திரும்பவும் அழைக்கப்பட்டனர். சக்கரவர்த்தியின் மனைவியைச் சோதனை செய்தனர். இந்த முறை சோதனையில் குழந்தை உற்பத்தியானதை உறுதி செய்து தங்கள் பிழைக்கு மன்னிப்புக் கோரினர்.

நவம்பர் 23ம் திகதிக்கு முன்பே சக்கரவர்த்தியின் மனைவி விமானப்படை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 23ம் திகதி நவம்பர் மாதம் வந்தது. அன்று குழந்தை பிறக்கும் அறிகுறி ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றவில்லை. அவளைச் சோதித்த டாக்டர் பிரசவத்திற்கு இன்னும் சில நாட்கள் செல்லும் என்று கூறி விட்டார்.

குழந்தையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த தாய்க்கு பெரிய ஏமாற்றமும் கவலையும் ஏற்பட்டது. பாபா பிறந்த அந்நாளில் அல்லவா குழந்தை பிறக்கும் என்று அசையாத நம்பிக்கை வைத்திருந்தாள்? பிற்பகலும் போய் இரவும் வந்தது. இரவு வேலையைப் பொறுப்பேற்கும் தாதியும் நோயாளிகளைப் பொறுப்பு எடுக்கத் தொடங்கினாள்.

மனம் தளர்ந்து கவலை தோய்ந்த முகத்துடனிருக்கும் சக்கரவர்த்தியின் மனைவியைப் பார்த்து 'நீர் எதற்கு உற்சாகமற்று, உலகமே இருண்டு விட்ட மாதிரிக் காட்சி அளிக்கிறீர்' என்றாள்.

'இன்று ஒரு தெய்வீகப் புருஷர் பிறந்த தினம். இந்த நன்னாளில் எனக்கும் ஒரு ஆண்மகன் கிடைக்குமென்று அவரே ஆசிர்வதித்துள்ளார். ஆனால் டாக்டர்கள் பிள்ளைப் பேறு இன்னும் சில நாட்கள் ஆகும் என்று சொல்லுகிறார்கள். தாதி அந்த தெய்வீக புருஷர் சத்திய சாயி பாபா என்று அறிந்ததும் அந்த மகான் அவ்வாறு கூறியிருந்தால் எதுவித சந்தேகமின்றி குழந்தை இன்றே பிறக்கும். இன்று நாள் முடிய எவ்வளவோ நாழிகையாக இருக்கிறது' என்று கூறி நோயாளியைப் பிரசவ அறைக்கு அழைத்து சென்று வேண்டிய ஒழுங்குகளைச் செய்தாள். 'நீங்கள் பாபாவின் பக்தையா?' என்ற கேள்விக்கு தாதி வேறு மதத்தைச் சேர்ந்தவள் ஆனால் பாபாவைப் பற்றி நன்கு கேள்விப்பட்டுள்ளேன். அவர் கடவுளின் தூதுவர். அவர் சொல்வது நடந்தே தீரும் என்றாள்.

அன்று பின்னிரவின் போது எதுவித வருத்தமுமில்லாமல் சக்கரவர்த்தியின் மனைவி அழகே உருவெடுத்த ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள்.

உரிய நேரத்தில் பாபா தான் கூறியபடி சக்கரவர்த்தி இல்லம் சென்று குழந்தையை ஆசிர்வதித்து 'கிருஷ்ண கிசோர்' என்ற நாமத்தைச் சூட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தி ஓய்வு எடுக்கும் காலம் கிட்டியதும், தான் பாபாவிற்கு சேவை செய்வதே தன் தலையாய கடமை என்று எண்ணி அவரிடம் சென்று தனக்கு ஒரு வேலை தரும்படி மன்றாடினார். பாபாவோ 'பெரிய ஆசாமிக்கு இங்கே என்ன வேலயிருக்கப் போகிறது' என்று விகடமாகப் பதில் அளித்தார்.

சக்கரவர்த்தியினரின் குடும்பத்தாரின் தூய அன்பை மதித்து, பயன் கருதாத சேவை செய்யும் மனப்பான்மையை மதித்து அவரை சத்திய சாயி பாபா கல்லூரி மாணவர் இல்லத்திற்கு மேற்பார்வையாளராக அமர்த்தினார்.

அவரின் அன்பு மைந்தனும் அதே கல்லூரியில் கல்வி கற்று வருகிறான். அதிர்ஷ்டமும் தெய்வீக அன்பும் நிறைந்த இந்த பண்பாளர்கள் பாபாவின் தெய்வீக நிழலிலேயே ஆனந்தமாக வாழ்வை நடத்துகிறார்கள்.

## பாபாவின் அருள்மொழிகள்

மீன் அழுக்கு நீரிலேயே வாழ்கிறது. ஆனால் அது அழுக்கைத் தின்று நீரைச் சுத்தப்படுத்தி விடுகிறது. சுயநலம் கொண்டவர்களும் சமூகத்தில் அழுக்கை நாடியே வாழ்கிறார்கள். அவர்களால் சமூகம் மேலும் அசுத்தமாகி விடுகிறது. மீனை வெளியே வைத்திருப்பதால் வெளியே நாற்றம் ஏற்படுகிறது. சமூகத்தில் சுயநலமியை வைத்திருப்பதால் உள்ளூர நாற்றம் பரவி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துவம் கை விட்ட போதும் தெய்வீகம் கை கொடுத்தது

மம்மி என்னைக் கட்டிலிலிருந்து கீழே தூக்கி விடு. நான் நடக்கப் போகிறேன்' என்றான் அவர்களுடைய மகன்.

பாரிச வாதத்தால் பாதிக்கப்பட்டு ஒன்றுமே நடக்க முடியாத நிலையில் இருப்பது மகனுக்கு நன்கு விளங்குமென்பதால் அவனுடைய வேண்டுகோள் தாய்க்கு விசித்திரமாக இருந்தது. மகனைச் சாந்தப்படுத்தி 'நள்ளிரவு, நடக்கப் பழகிறதற்கு இது உகந்த நேரமல்ல. நீ கீழே விழுந்தால் உன்னைத் தூக்கி விடவும் ஆட்கள் ஒருவருமில்லை, ஆகையால் படுத்து உறங்கு விடிந்ததும் நான் உன்னை கீழே இறக்கி விடுகின்றேன்' என்று மகனுக்குப் புத்திமதி கூறினாள்.

மகனோ விடுவதாக இல்லை. 'இவ்வளவு நாளும் என் கால்கள் காற்றில்லாத உதை பந்து போல நசுங்கிக் கிடந்தது. இப்போ காற்று நிரம்பி அழுத்தமாக இருக்கிறது. மின்சாரம் என் கால்களுக்குள் பாய்வது போல் உணர்கிறேன். மம்மி தயவு செய்து ஒரு தரம் என்னை இறக்கி விட்டுப் பாரேன்'. என்று கெஞ்சும் குரலில் கூறித் தன் தாயைப் பரிதாபமாகப் பார்த்தான். மகனின் துயரத்தைத் தாங்காமல் அவனை நிலத்தில் இறக்கி விட்டாள்.

அவன் நடந்தான். ஒருவரின் உதவியையும் அவன் நாடவில்லை. இயற்கை நடையாகவே தாய்க்குத் தென்பட்டது. பக்கத்து அறைக்குள் நடந்து சென்றான். அங்கிருந்து அவனுடைய பாதணியை எடுத்து மாட்டினான். தாயை ஒரு உற்சாகத்தோடு பார்த்தான்.

'மம்மி நான் இப்போ மைலாப்பூரிலுள்ள பூங்காவிற்கு உலாவச் செல்ல வேண்டும். நீயும் என்னுடன் துணையாக வா' என்று தாயை நிர்ப்பந்தித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கண்களையே சீதா மகா இலட்சுமியால் நம்ப முடியவில்லை. ஒன்றும் விளங்காமல் திகைப்படைந்தாள். 'இது எவ்வாறு நடந்தது? பிரபல மருத்துவர்களே மகனால் இனி நடக்க முடியாது என்று கை விட்டு விட்டிருந்தனர்' மகனோ சுறுசுறுப்பாக அங்குமிங்கும் நடந்து கொண்டே இருந்தான். அவன் நடப்பதை உன்னிப்பாகக் கவனித்தாள். அவள் உடம்பு இன்ப வெள்ளத்தில் மிதந்தது. மகனின் இருண்ட வாழ்வில் பாரிய திருப்பம் ஏற்பட்டு ஒளிவீசப் போவதை எண்ணிப் பெருமிதமடைந்தாள்.

மகனை அன்பு சுரக்க அணைத்து, விடிந்த பின் பூங்காவிற்கு உலாவச் செல்லலாமென்று பரிந்து கூறினாள்.

மகனோ பூங்காவிற்குச் செல்ல அடம் பிடித்தான். நீண்ட காலம் ஒதுங்கி ஓய்ந்திருந்து வாடிய மகனை வெறுப்பூட்ட அவள் விரும்பவில்லை. மகனின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் பொருட்டு, அதிகாலை நாலு மணிக்கே இருவரும் பூங்காவிற்கு உலாவச் சென்றனர்.

வீடு திரும்பும் போது, உற்றார், உறவினர் சீதா இலட்சுமியின் மகன் சுகப்பட்டதை அறிந்து இல்லம் வந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். வைத்திய கலாநிதிகளுக்கு சிறுவன் கொடிய வியாதியிலிருந்து மீட்சி பெற்றது அதிசயமாக இருந்தது. மகா சீதா இலட்சுமி, மகன் கட்டிலில் சாய்ந்த நாள் முதல், ஆறுதலும், அமைதியுமற்ற வாழக்கையே நடத்தினாள்.

கோட்டில் வேலைப்பழு, வீட்டில் பதிசேவை, இரவில் நித்திரையற்று மகனை உற்சாகப்படுத்தல் - இவ்வளவு வேலைச் சுமையுடன் பொதுநலச் சேவா மன்றங்களின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்தாள். இதனால் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு, உடம்பு மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாள்.

இளைஞன் தரிசனம்

இந்தநிலையிலும் தேடி வந்து நோயைத் தீர்த்த புண்ணியனை தன் குடும்பத்துடன் நாடிச் சென்றாள். புட்டபர்த்தி ஈசனை நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத காலம் அது. சாய்பாபா என்றால் அப்பொழுது சீரடியானையே குறிக்கும். சீரடி, பம்பாய் நகருக்கு அருகாமையிலுள்ளது. நீண்ட பிரயாணத்தின் பின் சீரடி அடைந்தனர். அப்பொழுது இருட்டாகி விட்டது. இரவை ஓர் விடுதியில் கழிக்க ஒழுங்கு செய்தனர்.

பிரயாணக் களைப்பாலும், உடம்பு நோவாலும் பாதிக்கப்பட்ட சீதா மகா இலட்சுமி விடுதியை அடைந்ததும் கட்டிலில் சாய்ந்து விட்டாள். சிறிது நேரத்தின் பின் ஒரு இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன் அவர்களிருந்த விடுதியை அடைந்து 'சீதா மகா இலட்சுமி எழுந்திரு. நான் உனக்காக தீர்த்தம் கொண்டு வந்து இருக்கிறேன். தீர்த்தத்தைப் பருகு' என்றான். அவளோ குழம்பிய நிலையிலிருந்தாள். அன்னிய இடம். தீர்த்தம் கொண்டு வந்தவர் முன் பின் தெரியாதவர். தான் அங்கிருப்பது இந்த நபருக்கு எவ்வாறு தெரிந்தது? இதனால் தீர்த்தத்தை ஏற்க பின்னடைந்தாள்.

வந்தவரோ அவளை விடுவதாக இல்லை. அவர் 'சீதா மகா இலட்சுமியின் தேகம் நல்ல ஆரோக்கியமான நிலையிலிருப்பதாக எல்லாரும் நினைக்கிறார்கள். அவளின் சரீரம் தாங்கொணா வேதனையில் வருந்துகிறது. இந்தா இந்தத் தீர்த்தத்தைப் பருகு' என்றார். வந்த இளைஞன் கூறியது உண்மையாதலால், அவளின் கணவனும், மகனும் அவளைத் தூக்கி உயர்த்தி, அவளின் இரு கைகளையும் நீட்டி தீர்த்தத்தைப் பெறச் செய்தனர்.

தீர்த்த மகிமை

தீர்த்தத்தைச் சுவைத்தவுடன் அவள் 'ஆ! நான் பருகியது தீர்த்தமல்ல, அமிர்தமல்லவா என் கையில் இடப்பட்டது' என்று கூறி அந்த இளைஞனுக்கு நன்றி கூறும் பொருட்டு அவன் பக்கம் திரும்பினாள். தீர்த்தம் கொண்டு வந்தவர் திடீரென மறைந்து விட்டார். அன்று இரவு முழுதும் சாய்பாபா தங்கள் மேல் காட்டும் தெய்வீக அன்பை நினைந்து நினைந்து கண்ணீர் விட்டார்.

விடிந்ததும் மகா சீதா இலட்சுமி வெகு உற்சாகமாத எழுந்திருந்தாள். குடும்பத்துடன் சீரடி அய்யனின் சமாதிக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அகமுருகித் தங்கள் பிரார்த்தனையைச் செலுத்தினர், என்றுமிலா மகிழ்ச்சியுடன் சென்னை திரும்பினர்.

'சாயீசனை உண்மை அன்பினால் பிணைத்தால் அவன்' நிழலைப் போல் பக்தர்களைப் பின்பற்றுவான். உண்மை, நற்குணம், நல்லொழுக்கம், தன்னலமற்ற தூய சமூக சேவையால் 'அவனை ஆட்கொள்ளலாம்.' நாளாக நாளாக நம்மிடத்தே 'அவனுக்கு' பற்று மிகுந்து வரும். 'அவனால்' பெற்று வரும் நன்மையெல்லாம் பேசி முடியாது.'

சென்னையடைந்த சில நாட்களில் சீதா மகா இலட்சுமி ஒரு கனவு கண்டாள். ஒரு பெண் தன்னை மலைகள் நிறைந்த இடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு தெய்வீகக்களை வீசும் இளம் வாலிபரை தான் கண்டதாகவும் அந்தக் கனவு அமைந்திருந்தது. கனவு கண்ட மறுநாள் தன் சிநேகிதி ஸ்ரீமதி அனுமந்தராவ் இல்லத்திற்கு தன் மகனுடன் சென்ற பொழுது, மாடிப் படியில் அதே தெய்வீக இளைஞனை நேரில் சந்திக்க நேர்ந்தது.

இந்த இளைஞன் வேறு யாருமல்ல, சாட்சாத் ஸ்ரீ சத்திய சாய்பாபாவே. அப்பொழுது அவருக்கு வயது இருபது. மகா சீதா இலட்சுமியைப் பார்த்து பாபா 'நேற்று இரவு கனவில் ஒருமுறை என்னைப் பார்த்தாயல்லவா!' என்று கூறித் தாய்க்கும் மகனுக்கும் பிரசாதம் வழங்கினார். தாய் அன்று கட்டுக் கடங்காத பரவசம் அடைந்தாள். இது தான் இவர்களின் முதல் சந்திப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியரைக் குணப்படுத்திய வைத்திய நாதர் சாயிபாபா

உரவ கொண்டா, ஆனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள சிறிய ஊர். இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் சத்திய நாராயண ராஜூவுடன் சக மாணவராக சில காலம் கல்வி பயின்றவர் மீரான் மொய்தீன். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு, மருத்துவம் படிக்க சொந்த ஊரான உரவ கொண்டாவை விட்டு வெளியேறினார். அதன் பின் மீரா மொய்தீன், பிறவி ஞானி, சத்திய நாராயண ராஜூவையோ அல்லது தற்போது நாம் வணங்கும் சாயீசன் ஸ்ரீ சத்திய சாய் பாபாவையோ சந்திக்கும் பாக்கியம் இவருக்குக் கிட்டவில்லை.

மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றதும் உரவ கொண்டா திரும்பினார். அங்கு ஒரு மருத்துவ மனையை அமைத்து, வைத்தியத் தொழிலை ஆரம்பித்தார். தொழிலில் நல்ல பெயரும் வருவாயும் கிடைத்தது.

தக்க வயதில் விவாகமும் இவருக்கு நடந்தது. இவரின் இல்வாழ்க்கை அமைதியாக முன்னேறிக் கொண்டிருந்தது. மீரான் மொய்தீன் பத்துக் குழந்தைகளுக்கு தந்தையானார்.

சுகம் - துக்கம், செல்வம் - ஏழ்மை, இலாபம் - நஷ்டம், போற்றுதல் - தூற்றுதல் என்ற எதிர் எதிரான நிலைகள் நிறைந்ததே மனித வாழ்க்கை.

பத்துக் குழந்தைகளை பராமரிக்க வேண்டிய தாய் மரணமடைந்தாள். மீரா மொய்தீன் தாங்கொணாத் துக்கத்தில் அமிழ்ந்தார். மருத்துவ மனையின் நிர்வாகமும் தன் சொந்த பத்து செல்வங்களையும் பராமரிப்பதும் அவருக்குப் பெரும்பிரச்சினையாக தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகளைக் களைய, மதுதியை அடைந்து ஆண்டவனின் அருளையும் அனுக்கிரகத்தையும் பெற வேண்டியவர், கெட்ட சிநேகிதரின் சகவாசத்தைச் சம்பாதித்தார். இதன் மூலம் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையானார். சிறு பிரச்சினையை எதிர்த்துப் போராட சக்தியற்றவர், மேலும், மேலும் பிரச்சினைகளைப் பெருக்கினார். கவலைகள் கூடிற்று. அவரின் மனோநிலை தாக்கப்பட்டது. நித்திரை சிதைந்தது.

நித்திரை மாத்திரைகள் அவருக்கு ஒரு சில மணித்தியாலங்கள் மாய அமைதியைக் கொடுத்தன. உள்ளுக்குள் தேட வேண்டிய அமைதியையும் சாந்தியையும் வெளியிலிருந்து விலைக்கு வாங்க முயன்றார். முடிவு கொடிய மயக்க மருந்து - 'மோபியாவை' ஊசி மூலம் உடம்பில் செலுத்தினார். நாளொன்றிற்கு இரண்டு குப்பிகளுடன் வைத்தியம் தொடங்கிற்று. மருந்தின் வேகத்தால் சற்று உற்சாகம் பெற்றார். தன் வேலைகளை ஓடி ஆடிச் செய்தார். ஆனால் இந்த நிலை நீடிக்கவில்லை.

மருந்தைக் குறைப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்தது. குறைந்த மருந்தில் உடம்பு முற்றிலும் இயங்க மறுத்தது. அத்துடன் கடுமையான வியர்வை, களைப்பு, அமைதியின்மை இவைகளால் பீடிக்கப்பட்டார்.

கையிலிருந்த பணமும் கரைந்து விட்டது. தொழிலில் வருவாயும் படிப் படியாக குறையத் தொடங்கிற்று. அவரிடம் சொந்தமாகவுள்ள இரண்டு துண்டு காணியையும், ஒரு சிறு வீட்டையும் பணம் தேவைப்படும் போது விற்றார். இதனால் கிடைத்த பணத்தாலும், சொற்ப வருவாயாலும் காலத்தைக் கழித்தார். தனது பிரச்சினைகளை அவரே கூறுவதைப் பாருங்கள்:-

'பத்துக் குழந்தைகள் - (6 பெண், 4 ஆண்) எவ்வாறு வாழ்கிறார்கள் - என்ற சிந்தனையே எனக்கு ஏற்பட்டதில்லை. அவர்கள் உணவற்று, உடையற்று, பெற்றோரின் அன்பற்று பெரும் அல்லற்பட்டனர். என்மேல் மிகவும் நம்பிக்கையும் நன்மதிப்பும் வைத்த ஒரு சில நோயாளிகள் வைத்தியத்திற்காக என்னைத் தேடி வருவார்கள். அவர்கள் என்னிடம் ஏதும் பணம் தருவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் குழந்தைகள் என்னை மொய்த்துக் கொண்டு, அந்தப் பணத்தில் ஒரு பகுதியையாவது அரிசி வாங்குவதற்குத் தரும்படி மன்றாடுவார்கள்.

நானோ கெட்ட வார்த்தைகளைக் கொட்டிஅவர்களை விரட்டுவேன். குழந்தைகள் என்ன சாப்பிடுகிறார்கள், எவ்வாறு உயிர் வாழ்கிறார்கள், என்ற சிந்தனை அற்றவனாக வாழ்ந்தேன். 'மோபியா' வேண்டுவதற்குப் பணம் சேர்ப்பதே என் நோக்கமாக இருந்தது.

குழந்தைகளின் பரிதாபகரமான நிலையைக் கவனித்த நோயாளிகள், எனக்குச் சேர வேண்டிய பணத்தின் ஒரு பகுதியை, எனக்குத் தெரியாமல் அவர்களுக்குக் கொடுப்பார்கள். பத்துக் குழந்தைகளும் அதிலே பசியாறும். நெடுங்காலம் இத்தகைய மிருக வாழ்க்கையே நடத்தினேன்.

ஆனால் என் நிலையோ வேறு. இந்தக் கட்டத்தில் என்னுடைய நெருங்கிய நண்பர் டாக்டர் என் அஞ்சநெயில் சத்திய சாயி பஜனை மன்றத்தை நான் வசிக்கும் வீட்டிற்கு அண்மையிலுள்ள சுப்பிரமணேஸ்வரர் கோவிலில் தொடங்கி வைத்தார். ஒரு வியாழன் இரவு நான் அந்தப் பக்கமாகப் போகும் பொழுது பஜனை நடந்து கொண்டிருந்தது.

ஆத்மீக விஷயத்தில் பங்கு பற்றாத நான் அன்று என்னவோ அங்கு இனிமையாகப் படிக்கும் கீதங்களைக் கேட்கும் பொருட்டு ஒரு மூலையில் போய் அமர்ந்தேன். பஜனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது, பழைய நினைவுகள் என் மனதில் உதித்தன.

'பாபா, ஆரம்பப் பள்ளியில் நாமிருவரும் ஒன்றாகக்கல்வி கற்றோம். ஆகையால் என்னை உங்களுக்கு நினைப்பாக இருக்கும். உங்களின் தெய்வீகத்தில் சிலர் 'சந்தேகப்படுகிறார்கள். மற்றும் சிலர் உங்களை அவதாரமாகப் போற்றுகிறார்கள். நான் இந்த விவாதத்தில் என்னை உட்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இதன் உண்மையை அனுபவ ரீதியாக அறிய விரும்புகின்றேன்.

தற்பொழுது நானே என்னை துர்மார்க்கமான பழக்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைப் படுத்தியுள்ளேன். இதனால் மிகவும் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

நீங்கள் அவதாரமானால் என்நிலை உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். இந்தக் கொடிய பழக்கத்திலிருந்து மீட்சி பெற உண்மையாகவே விரும்புகிறேன். ஆகையால் இந்தத் தீய பழக்கத்திலிருந்து விடுபட எனக்குத் திடமான மனோ தைரியமும் தக்க பலனும் தரும்படி மன்றாட்டமாக வேண்டுகிறேன். அப்படி நடந்தால் நீங்கள் ஓர் தெய்வீக புருஷனென்று ஏற்றுக் கொள்ளுகின்றேன் என்று மிகுந்த பயபக்தியுடன் பிரதிக்ஞை செய்தேன்.

பாபா என்னைக் கண்டிப்பாகக் காப்பாற்றுவார் என்ற அசையாத நம்பிக்கையுடன் எழுந்து நின்றேன். பஜனையும் அப்பொழுது முடிவுக்கு வர நேரம் சரியாக இருந்தது.

அனைவருக்கும் விபூதிப் பொட்டலம் வழங்கப் பட்டது. என்கையில் விபூதி கிடைத்ததும் ஒரு அசையாத தீர்மானத்திற்கு வந்தேன். என்னதான் நடந்தாலும், என் தேகநிலை எவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டாலும், இந்த நிமிடம் தொடக்கம் மூன்று நாட்களுக்கு கொடிய மோபியா மருந்தைத் தீண்டவே மாட்டேன். நாலாம் நாள் நான் உங்கள் ஆசீர்வாதத்தால் உயிர் பிழைத்தேனாகில் உங்களை ஒரு தெய்வீக புருஷனாக ஏற்றுக் கொள்வேன்.

வீடு சென்றதும் மருந்தைப் பற்றிய எண்ணத்தை விட்டேன். நேரம் செல்லச் செல்ல மயக்கம் அகோரமான வியர்வை, நரம்புகள் இழுப்பதினால் தாங்க முடியாத வலி, இருமல், உடம்பெல்லாம் எரியும் போல் உணர்ச்சி இவ்வளவு கோரமான சித்திரவதையை அனுபவித்தேன்.

இரண்டாம் நாள் நிலைமை இன்னும் மோசமடைந்தது. சிறுநீருடன் இரத்தமும் வெளியேற தற்கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் உதித்தது.

ஒருவாறு இரண்டாம் நாள் கழித்து அடுத்த மூன்றாம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதித்தது. நான் மரணமடையும் நிலையில் இருந்தேன். உழம்பத் தொடங்கி விட்டேன். காலால் நிலத்தை உதைத்தும், கையால் சுவரை அடித்தும் பெரிய கூக்குரலிட்டேன். குழந்தைகள் என்னைச் சுற்றி நின்று கதறினார்கள். அயலிலுள்ளோர்கள். நான் அனுபவிக்கும் இம்சையையும் பிள்ளைகளின் பரிதாப நிலையையும் கண்டு கண்ணீர் விட்டார்கள்.

நான் மரணத்துடன் போராடிக் கொண்டிருப்பதை அறிந்த டாக்டர் நண்பரொருவர் நாலு குப்பி மோபியா மருந்துடன் என் இல்லம் வந்து, காலம் கடத்தாது இரண்டு குப்பி மருந்தை உடன் உள் செலுத்த வேண்டுமென்று அதற்காகிய ஆயத்தங்களைச் செய்தார்.

நான் அவரிடம், 'டாக்டர்' நான் பாபாவிற்கு கொடுத்த காலக்கெடு நாளை மாலையுடன் முடிவு பெறும். இவ்வளவையும் சகித்துக் கொண்டேன். இன்னும் அரைநாள் செல்ல வேண்டும். மருந்து உங்களிடம் இருக்கட்டும். என் வருத்தங்கள் மாறாது, நான் நாளை மாலைக்குப் பின் பிழைத்திருப்பேனாகில், மருந்தை நீங்கள் என் உடம்பில் ஏற்றலாம். உங்கள் உதவிக்கு நன்றி.' என்றேன்.

என்னுடைய கடைசி மகள் கபிதா பீபீயை அழைத்து என் மேசையில் மீதியாக இருந்த விபூதியைத் தரும்படி கேட்டேன். அதைப் பயபக்தியுடன் பெற்று, பாபாவை வணங்கி முழு விபூதியையும் நாவின் மேல் கொட்டி, திருநீறு உட்செல்லும் பொருட்டு தண்ணீரையும் அருந்தினேன். ஒரு சில நிமிடங்களில் ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்தேன். மறுநாள் காலை பதினொரு மணி வரையும் நான் விழிக்கவில்லை. நித்திரையில் ஏதோ நீண்ட யாத்திரை செய்வது போல் கனவு கண்டேன்.

நான் விழித்ததும் குழந்தைகளும், நண்பர்களும், டாக்டரும் என்னைச் சுற்றிநின்றனர்.

டாக்டர் என்னை நோக்கி 'உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது' என்று வினாவினார். நான் பாபாவை மனதில் தியானித்து, என் மனம் மிகவும் தெளிவாகவும் என்றுமிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியும் பெற்றிருக்கிறது. மோபியா மருந்தை இனி என்றும் தீண்ட மாட்டேன் என்றேன்.

அன்று தொடக்கம் இன்று வரை நான் நல்ல திடகாத்திரமாக பாபாவின் கிருபையால் இருக்கின்றேன்.

**********

## பாபாவின் அருள்மொழிகள்

சொர்க்கத்தை நாம் தேடிப் போக வேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் நாம் காட்டும் அன்பு, நமக்கு உதவ முடியாத ஜீவன்களிடமும் காட்டும் தயை, இவற்றினால் நம்முடைய மனத்துக்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கமாகும்.

தன்னுடைய முயற்சியால் ஒருவன் செல்வத்தைத் தேடிச் சேகரித்துக் கொள்ள முடியும். அதே போல நாம் செய்யும் நற்காரியங்களால் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள முடியும். அதன் பலனையும் அனுபவிக்க முடியும். செல்வம் நமது வறுமைக் காலத்தில் உதவுகிறது. அதே போல, புண்ணியம் துன்பங்களிலிருந்து நம்மைக் காக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை உள்ளம் படைத்த வில்மா அன்னைக்கு சாயிபாபா அளித்த தரிசனம்

வில்மா அம்மையார் கருணை உள்ளம் படைத்தவர். இவர் இயற்கையாகவே மற்றவர்களிடம் அன்பும் அனுதாபமும் உள்ளவர். அதனால் தானோ என்னவோ அவர் அமெரிக்காவில் வசித்து வந்த வாசஸ்தலம் 'கருணை இல்லம்" என்று அழைக்கப்பட்டது.

அங்கு வசித்தவர்களோ - ஆதரவு அற்றுத் தங்கள் இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட முதியோர்கள், தங்கள் சக்தியால் நடமாட முடியாத முடங்கள் - கண் இழந்தவர்கள், முக்கியமாகத் தாய்முகம் பாரா பிஞ்சு உள்ளங்கள்.

270க்கு மேற்பட்ட சிறார்களுக்கு அபயமளித்து, பராமரித்து, வளர்த்து, அறிவூட்டி, நல்லொழுக்கத்துடன் வெளியேறச் செய்தாள் இந்த மங்கை நல்லாள்.

வில்மா இவர்கள் அனைவருக்கும் உடன் பிறந்த சகோதரியாகவும் 'ஊனை வருத்திடும் நோய்வரின் உற்ற தாதியாகவும், கவலை எய்திடும் போதினில் இதஞ் சொல்லும் நண்பனாகவும்' எல்லாவற்றிற்கும் மேலாக பால் மணம் மாறாப் பச்சிளம் பாலகருக்குத் தாய்மையை அள்ளி ஊட்டும் தாயாகவும் விளங்கினாள்.

நலிவுற்றோரைப் பொலிவுறச் செய்வதே தன் தலையாய கடமையென்று கருதினாள்.

பதிலாக அங்குள்ள நொய்ந்தவர் காட்டும் இன்முகம், இன்சொல், குழந்தைகளின் சீலத்திருமுகம், அவர்கள் உதிரும் மோகனப் புன்னகை என்பன வில்மாவை ஆனந்தக் கடலில் அமிழ்த்தின.

போர்ட்லண்ட் நகருக்கு அப்பால் பிரசித்தியடைந்திராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை இல்ல நடவடிக்கைகளைப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சாயீசன் அறிந்திருந்தார். பலனைக் கருதாது பற்றற்ற கடமை செய்யும் இந்த நல்லாளுக்கு ஒரு செய்தி அனுப்பி வைத்தார் பகவான்.

அவர் செய்தி அனுப்பிய விதமும் விந்தையானது. வேறு யாரால் தான் இந்த முறையைக் கையாளக் கூடும்?

ஏன் அவ்வாறு அனுப்பினார் என்பதும் அவர் ஒருவருக்குத் தான் விளங்கும்

வில்மாவிற்குத் தொலைபேசித் தொடர்பு ஒன்று வந்தது. அது மிகவும் நீண்ட தூரத்திலுள்ள இடத்திலிருந்து வந்ததாகத் தென்பட்டது. மறு பக்கத்திலிருந்த ஒரு பெண்ணின் குரல்.

'கலாநிதி புறங்கி, சாயிபாபாவைச் சந்திப்பதற்காக இந்திரா தேவியின் தலைமையில் இந்தியா செல்லும் குழுவில் உங்கள் பெயர் பதியப்பட்டுள்ளது. உங்கள் பிரயாணச் செலவு 2000 டொலர்களைத் தயவு செய்து உடன் அனுப்பி வைக்கவும்'

வில்மா அதற்கு 'இதில் ஏதோ பிழை நடந்திருக்கிறது. இந்தியா போகும் உத்தேசம் எனக்கில்லை, இந்தச் சாயிபாபா என்பவர் யார்?' தொலைபேசி இணைப்பு உடன் துண்டிக்கப்பட்டது. தொலைபேசியில் கதைத்தவரின் விபரம் சொல்லப்படவில்லை.

இது ஒரு விசித்திரமான செய்தியாய் இருக்கிறது. என்னுடன் கதைத்த நபர் என்னைக் கலாநிதி என்று அல்லவோ விளித்தார். எனக்கு சர்வகலாசாலைகளோ அல்லது வேறு ஸ்தாபனங்களோ கலாநிதிப் பட்டம் அளிக்கவில்லையே!'

இந்திரா தேவியைப் பற்றி வில்மா ஓர் அளவு அறிந்திருந்தார். இந்திரா தேவி யோகாசனம் கற்றுக் கொடுக்கும் பிரபல ஆசிரியை. யோகமுறைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக உலக நாடுகளுக்கு அடிக்கடி சென்று வருவார். சாயிபாபாவைப் பற்றி வில்மா ஒன்றும் அறிந்திருக்கவில்லை ஆகையால் பாபாவைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌவட் மேபெற் (Howard Murphet) என்னும் அவுஸ்திரேலியர் எழுதிய 'சாயிபாபா - அற்புத மனிதர்' என்னும் நூல் வில்மாவிற்குக் கிடைத்தது. அந்தப் புத்தகத்தை வாசிக்க இந்தியாவிற்குச் சென்று இந்த அற்புத மனிதரைச் சந்திக்க வேண்டுமென்ற தாகம் ஏற்பட்டது.

தொலைபேசித் தொடர்பு ஏற்பட்டு ஒரு சில நாட்கள் சென்றன. எதிர்பாராத விதமாக வில்மாவின் அளப்பரிய சேவையைப் பாராட்டு முகமாக அரசாங்கம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்தது. இதனால் வில்மா, பாபாவின் மேல் வைத்த நம்பிக்கை மேன்மேலும் வளர்ந்தது.

இந்தியா சென்று பாபாவைத் தரிசிக்க நிறைய ஆர்வம் ஏற்படத் தொடங்கிற்று. ஆனால் சில தடைகள் அவள் முன்னின்றன. போய் வருவதற்குப் போதிய பணம் இன்மை, தன் பொறுப்புக்களை ஏற்பதற்கு தகுதியும், போதிய அனுபவமுள்ளோர் கருணை இல்லத்தில் இல்லாமை.

தொலைபேசியில் அன்று தீர்க்க தரிசனமாக இரண்டு விஷயங்கள் வெளியிடப்பட்டன. ஒன்று வில்மா கனவிலும் எதிர்பாராத கௌரவப்பட்டம். இது நிருபிக்கப்பட்டு விட்டது. மற்றது இந்த மாமன்னனை இந்தியா சென்று நேரே தரிசிப்பது. அதுவும் நடந்து தீருமென்ற பூரண நம்பிக்கை வில்மாவிற்கு ஏற்பட்டது. எதற்கும் இவை பாபாவால் தான் நடந்ததென்பதற்குத் தனக்குச் சந்தேகமற்ற மிகவும் தெளிவான ஒரு அடையாளம் காட்டும் படி மனதில் பாபாவை வேண்டினாள்.

அத்துடன் அவள் இந்தியா செல்வதற்கு அவளை எதிர்நோக்கும் தடைகளையும் நீக்க வேண்டுமென்றும் மற்றுமொரு வேண்டுகோள் விடுத்தார்.

மோதிர அன்பளிப்பு

வில்மா விசித்திரமான பழக்கத்திற்கு ஆளாகியிருந்தாள். விரல்கள் நிறைய மோதிரங்களை அணிந்து அவைகளின் அழகை ரசிப்பது. அவளின் பொழுது போக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை இல்லத்தில் நோயாளிகளையும், குழந்தைகளையும் பராமரிக்கும் போது மோதிரங்களால் தடைகள் ஏற்படும் என்பதால், அவைகளை விரல்களினின்றும் அகற்றி ஒரு சிறு தோற்பையில் வைத்துக் கொள்வாள். தோற்பை எப்பொழுதும் தன் மேல் அங்கியின் உறையில் இருக்கும். சௌகரியம் ஏற்படும் போது மோதிரங்களை அணிந்து கொள்வாள்.

இந்த மோதிரங்களில் விலையில் மிகவும் குறைந்த, சாதாரண நீலக் கண்ணாடிக் கல் பதித்த மோதிரமே, வில்மாவின் மதிப்பையும், கவனத்தையும், கவர்ந்ததாக இருந்தது. கருணை இல்லத்தில் வளர்ந்து, பெரியவனாகி, வெளியேறி, நல்லொழுக்கத்துடன் வாழும் நல்லவனாக ஒருவனால் நத்தார் பரிசாக அன்னை வில்மாவிற்கு வழங்கப்பட்டது அந்த மோதிரம். ஒரு நாள் வில்மா தன் சிநேகிதியுடன் பேசும் படம் பார்க்கச் சென்றாள். 'வலது குறைந்தோரைப் பராமரிக்கும் முறைகள்' பற்றிய படம் அது. இந்தப் படத்தை வில்மா முன்பே பார்த்திருந்தாள். அதனால் படத்தில் மனம் நாடவில்லை.

விரல்களில் மோதிரங்களை அணியாமலிருப்பதை அப்பொழுது உணர்ந்தாள். தன்தோல் பையை எடுத்து பக்கத்தில் காலியாக உள்ள ஆசனத்தில் வைத்து மோதிரங்களை, ஒவ்வொன்றாக அணிந்தாள்.

தனது மதிப்பிற்கும், பெருமைக்குரிய நீலக்கண்ணாடிக்கல் மோதிரம் பையுள் காணப்படவில்லை. தான் அன்று சென்ற இடங்களை எல்லாம் நினைவு படுத்தினாள். எங்கும் அந்த மோதிரத்தை வைத்ததாக நினைவு வரவில்லை. திரையில் ஓடும் படமும் முன்பே பார்த்தது. குழம்பிய நிலையிலுள்ள வில்மா தன் சிநேகிதியை அழைத்துக் கொண்டு கருணை இல்லத்திற்கு திரும்புவதற்கு எண்ணங் கொண்டாள்.

அப்பொழுது கொட்டகைக்குள் ஒருவித காற்று வீசிற்று. விமலாவின் தோல்பையிலிருந்து நீல ஒளிக்கதிர் பளிச்சிட்டு தோல்பைக்குள் பாய்ந்ததை வில்மா அவதானித்தாள். அவள் மனதிற்குள்ளும் 'இதோ நீ கேட்ட தெளிவான அடையாளம்' என்ற குரல் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல் பையைச் சட்டென எடுத்து, பையுக்குள் தன் விரல்களை விட்டாள். மோதிரமொன்று இருப்பதை உணர்ந்தாள். மோதிரம் சற்றுச் சூடாக இருந்தது. மோதிரத்தை உடன் வெளியே எடுத்தாள். அந்த அரை இருட்டிலும் மோதிரத்திலுள்ள கல்லிலிருந்து பிரகாசமான நீல ஒளி கண்ணைக் கூசச் செய்தது.

இதை அவதானித்த வில்மாவின் சிநேகிதி 'ஆ இந்த மோதிரம் உங்களுக்கு எப்டிக் கிடைத்தது?' என்று வினாவினாள்.

ஆச்சரியத்துடன் இருவரும் கொட்டகைக்கு வெளியே வந்து அதிசய மோதிரத்தை வெளிச்சத்தில் உற்று நோக்கினர். கல்லில் ஒளி பட்டதும் அதன் பிரகாசம் மேலும், மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது. வில்மா தவறி விட்டதாகக் கருதிய அதே மோதிரத்தில் அவள் மோதிரத்தில் அவள் என்றுமே காணாத ஒளி வடிவம் பொருந்திய புத்தப் புதிய நீல நிறக்கல் பதிக்கப்பட்டிருந்தது. அந்த அழகிய கல்லினால் மோதிரம் பொலிவுற்று விளங்கியது.

மோதிரத்தைப் பிரசித்தி பெற்ற நகை வியாபாரியிடம் காட்டிக் கல்லின் மதிப்பை அறிய ஆவலாயிருந்தனர். கல்லைப் பரிசோதித்த நகை வியாபாரி 'இது ஒரு நல்ல இனம். ஆயிரம் டொலருக்கு மேல் பெறும் என்று விலை மதித்தார்.'

வில்மாவின் சிநேகிதியால் இதை நம்ப முடியவில்லை. கண்ணாடிக் கல் எவ்வாறு நவரத்தினக் கற்களில் ஒன்றாகும்? இன்னும் ஒரு நகை வியாபாரியின் அபிப்பிராயத்தையும் அறிய வேண்டுமென்று அங்கு சென்றனர். வில்மா மோதிரத்தை நகை வியாபாரியிடம் கொடுக்கும் போது கல்லில் ஒரு நிற பேதம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாசமும் கூடி இருந்தது. கல்லைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்திய பின் 'இது விலையுயர்ந்த நீலக்கல். இது ஆயிரத்தி ஐந்நூறு டொலர்களுக்கு மேல் பெறும்' என்றார்.

வில்மாவும் சிநேகிதியும் கருணை இல்லம் போகும் வழியில் பிறிதொரு நகை வியாபாரியையும் அணுகினர். கல்லின் நிறத்தில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவதையும் அவதானித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இது வைரக்கல். கை தேர்ந்த ஒரு தொழிலாளியால் மிகவும் திறம்பட வெட்டப்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூறு டொலர்களுக்கு மேல் மதிக்கலாம்' என்றார்.

பாபாவின் மேல் பூரண நம்பிக்கை வில்மாவிற்கு ஏற்பட்டது. அன்று முதல் அவளுக்கு அவரின் நினைவாகவே இருந்தது. அவரை நேரில் கண்டு வணங்கி அவரின் ஆசிர்வாதத்தைப் பெறத் துடித்தாள். சாயீசன் தன் தடைகளை அகற்றிக் கூடிய சீக்கிரம் தனக்குப் பிரசாந்தி நிலையத்தில் தரிசனம் அளிப்பார் என்று திடமாக நம்பியிருந்தாள்.

கருணை இல்லத்தில் வியாதியால் பீடிக்கப்பட்டு வில்மாவின் பராமரிப்பால் சுகப்பட்டு வெளியேறியவர்கள் அநேகர். அவர்கள் தங்கள் வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்துவதற்கு அங்கு அடிக்கடி வருவார்கள். இந்த வகுப்பைச் சேர்ந்த இரண்டு சிநேகிதர்கள் ஒரு பிற்பகல் வில்மாவைச் சந்திக்க வந்தார்கள். அவர்களை அன்புடன் வரவேற்று அமர வைத்தாள். அவர்களில் ஒருவர் 'அம்மா, கருணை இல்லத்தில் வைத்தியத்திற்கும் பராமரிப்பிற்கும் சேர்க்கப்படுபவர்கள் எவரிடமும் நீங்கள் கால் அணா கூட ஏற்பதில்லை என்று எங்களுக்கு நன்கு விளங்கும்.

ஆனால் நாங்கள் இருவரும் ஈராயிரம் டொலர் கொண்டு வந்துள்ளோம். இப்போ உங்கள் செலவிற்குப் பணம் தட்டுப்பாடு இருப்பது போல் நாங்கள் விளங்குகிறோம். ஆகையால் இந்தப் பணத்தைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். இதை நாங்கள் நன் கொடையாக உங்களுக்கு வழங்கவில்லை. உங்களுக்கு எப்ப தர முடியுமோ அப்போது நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். வட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. உங்கள் பராமரிப்பில் நாங்கள் இருவரும் நல்ல திடகாத்திரமாக வாழ்கிறோம். பணத்திற்கும் தட்டுப்பாடில்லை.

தொலைபேசியில் குறிப்பிட்ட தொகையும் ஈராயிரம் டொலர்கள். இவர்கள் கொண்டு வந்ததும் அதே தொகை அவர்களிடம் பணத்தைப் பெற விருப்பமில்லா விட்டாலும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபாவின் செய்கையாயிருக்கும் என்று எண்ணி அவர்களிடமிருந்து அந்தத் தொகையைப் பெற்றாள். இந்தியாவால் திரும்பினதும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடுகளும் செய்தாள்.

வில்மாவிற்கு ஏகப்பட்ட சந்தோஷம். இந்திரா தேவியின் கோஷ்டியில் சேர்ந்து பிரசாந்தி நிலையம் வந்து சேர்ந்தாள். வில்மா எதிர்பார்த்த அந்த அற்புத நாளும் வந்தது. பாபாவின் தரிசனத்திற்காக நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் பிரசாந்தி நிலைய முன்றிலில் அமர்ந்திருந்தாள்.

பாபா வரும் நேரம். ஏதோ ஒரு தெய்வீக சூழலில் தான் இருப்பதாக உணர்ந்தாள். பாபா தன்பால் சொரியும் கருணையை நினைந்து நினைந்து மனம் உருகினாள். ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் விலாசமே தெரியாத முக்கியமற்றிருந்த தன்னை தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்தி பின்பு பல சிரமங்களை எல்லாம் வெகு இலகுவாகக் களைந்து தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பிரசாந்தி நிலையத்தின் முன் நிறுத்தி வைத்திருக்கும் சாயீசனை தரிசிக்க வில்மாவின் கண்கள் ஏங்கித் தவித்தன.

பாபாவும் அவள் முன் வந்து நின்றார். அவரின் தெய்வீக அழகைப் பார்த்துப் பார்த்து உளங் குளிர களித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். பாபா வில்மாவைப் புன்சிரிப்புடன் பார்த்துக் கண்ணை இமைத்து 'மோதிரம் பிடித்துக் கொண்டதா?' என்றார். வில்மா சொல்ல முடியாத பரவச நிலையை எய்தினாள்.

'Sai Baba invitation to glory' By - Howard Murphet என்னும் நூலிலிருந்து தழுவி எழுதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வெளியீடுகள்

1. காளி ஆச்சி - வே.வரதசுந்தரம்

2. யாழ் - திருநெல்வேலி
அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி
விநாயகர் ஆலய வரலாறு - 'சிவநெறிச் செம்மல்'
வை.அநவரதவிநாயக
மூர்த்தி

3. காளி ஆச்சி பாமாலை - வில்வராணி வரதசுந்தரம்

4. சாயிபாபா! சாயிநாதா - செ.நடேசபிள்ளை

5. சந்நிதி - சமய சஞ்சிகை

6. SHRINE - Journal of All Faiths

சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்

எஸ்.டி.சிவநாயகம்

மனிதர்கள் பலவிதம். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதம். பலர் பிறக்கிறார்கள். தமக்காகவே வாழ்கிறார்கள். பின் மறைகிறார்கள். அவர்களுக்காக யாரும் ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவதில்லை. அவர்கள் மறக்கப்பட்டு விடுகிறார்கள்.

ஆனால் சிலரோ தமக்காக வாழ்வதில்லை. பிறருக்காக வாழ்கிறார்கள். தன்னுடைய சுக துக்கங்களை விட பிறருடைய நல் வாழ்வுக்காக இரவு பகலாக உழைக்கிறார்கள். அதில் நிலையான இன்பம் காணுகிறார்கள். ஒரு தியாக வாழ்க்கை வாழ்கிறார்கள். பின்னர் சுற்றியுள்ளோர் எல்லாரும் கதறி அழ மறைகிறார்கள். இப்படியான பரோபகாரிகள் தெய்வத்துக்கு ஒப்பானவர்கள்.

தனக்காகவன்றிப் பிறருக்காக வாழ்ந்த ஒருவர் திருமதிசிவகாமி அம்பாள் செல்வரத்தினம் அவர்களாவர். திருமதி 'சிவகாமி அம்மாள் வெளியீட்டகம்' நிறுவப்பட்டு, 'சந்நிதி' என்ற மும்மாத இதழ் வெளி வருகின்றது.

திருமதி சிவகாமி அம்மாள் திருகோணமலையில் பிறந்தவர். அவருடைய தந்தையார் மராமத்து திணைக்களத்தில் ஒரு மேற்பார்வை அதிகாரியாகப் பணியாற்றியவர். திருமதி சிவகாமி அம்மாளுக்கு இரண்டு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள் இவரே வயதில் மூத்தவர்.

திருமதி சிவகாமி அம்மாள், திரு செ.செல்வரத்தினம் என்பவரைத் திருமணம் செய்து மிகக் குறுகிய காலமே குடும்ப வாழ்க்கை நடத்தினார். திரு .செல்வரத்தினம் அவர்களின் மறைவுக்குப் பின் இவர் மறு மணமே செய்து கொள்ளவில்லை. தமது சகோதரர்களையும், சகோதரிகளையும் தாய்க்குத் தாயாக இருந்து வளர்த்துப் படிப்பித்துப் பராமரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் சகோதரர்களின் பிள்ளைகளுக்கும் பாதுகாவலரானார். அந்தக் காலத்தில் திருமதி சிவகாமி அம்மாளின் குடும்பப் பொருளாதாரம் அவ்வளவு சிறப்பாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் அனைவரையும் கட்டிக் காத்து, உணவும் உடையும் அளித்து, சகலருடைய கல்வியையும் கவனித்துக் கரையேற்றியவர் திருமதி சிவகாமி அம்மாள் தான். இந்தச் சாதனையைத் தனியொருவராக எப்படிப் புரிந்தார் என்பது வியப்புக்குரியதாகும்.

தன்னை ஒறுத்துப் பிறரை நல்லபடியாக வாழ வைப்பதில் அவர் காட்டிய ஊக்கமும், உழைப்பும் தியாகமும் எத்தகையன என்பதை இப்போது எண்ணிப் பார்க்கும் போது பிரமிப்பைத் தருகிறது.

பண்புடனும் பணிவுடனும் பழகுவதில் திருமதி சிவகாமி அம்மாள் ஈடும் இணையும் அற்றவர். இனிமையாகவும் பதுமையாகவும் பேசுவார். அவர் பேச்சுக்கு மசியாதவர் யாரும் இல்லை. அவர் ஒரு உதவி கேட்டு வந்தால் அதை மறுப்பதற்கு யாருக்கும் மனது வராது.


அவரது சமார்த்தியமும், நிர்வாகத் திறமையும் தான் சுமார் பத்துப் பன்னிரண்டு பேரைக் கொண்ட குடும்பத்தைக் கட்டிக் காத்தது என்று சொல்லலாம். தம்பிமாரின் குழந்தைகளைப் படிப்பித்துக் கரை சேர்ப்பதில் கூட அவர் காட்டிய ஆர்வமும் பொறுப்புணர்வும் பாராட்டத் தக்கனவாகும்.

இன்று அவர் வளர்த்த குழந்தைகள் நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல உயர்வான நிலைகளிலும், பதவிகளிலும் உள்ளார்கள். அவர்கள் தங்களின் காவல் தெய்வமாக விளங்கிய திருமதி சிவகாமி அம்மாளின் நீங்காத நினைவாக ஏதாவது நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று கருதியதின் பெறுபேறே இந்த சிவகாமி அம்மாள் பதிப்பகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி நாதா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர்
அமரர்
செ. நடேசபிள்ளை

# இமயமென வாழ்ந்த மகன்

அன்புநிறை மனமுடையார் ஆறாத அருளுடையார்
பண்புநிறைத் திருவுடையார் பக்தியெனும் பேறுடையார்
என்புருக வழிபாடு இயற்றுகிற இயல்புடையார்
தென்புதரும் சொல்லுடையார் தெளிந்தமனப் பொலிவுடையார்

கண்ணெனவே தருமத்தைக் காக்கின்ற இயல்புடையார்
மன்னுபுகழ் திருமகளை மனையாண்ட மாண்புடையார்
நன்மக்கட் பேறுடையார் நலந்திகழும் திருவுடையார்
புண்ணியத்தின் வாழ்வுடையார் புகழ்கொண்ட பேருடையார்

இத்தனையும் வாய்த்ததனால் இமயமென இம்மண்ணில்
சத்தியமே வாழ்வாக சலிப்பின்றி வாழ்ந்தமகன்
அத்தனையும் பொய்யென்று அறிந்ததனால் அன்னையவள்
நித்தியமாம் பாதத்தில் நிலைத்தனராம் சாந்தியுற

அகில இலங்கைக் கம்பன் கழகம்.

Printed by Unie Arts (Pvt) Ltd. Tel.: 330195
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org